**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.01.2023 செவ்வாய் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 01 | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி-2023 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | 15 | **பதிவு செய்யப்பட்டது** |
| 02 | நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப-1) துறை அரசாணை (நிலை) 10 நாள் 23.01.2023 மூலம் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | 16 | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** அரசாணை (நிலை) 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப-1) துறை, நாள் 23.01.2023ஐ மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண்.354/2023/சி1</u> | | |
| **03** | அரசாணை (நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022 மற்றும் அரசாணை (நிலை) எண் 93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 24.06.2022ன்படி உரிய நடவடிக்கை எடுக்க, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.244478/2022/நநி2, நாள் 08.08.2022-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில், வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடத்தப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில், இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் ஒவ்வொரு வார்டும் நான்கு பகுதிகளாக பிரித்து நடத்தப்படும் வாடு கமிட்டி மற்றும் பகுதி சபாக்கூட்டங்களுக்கு தேவையான பதிவேடுகளை கொள்முதல் செய்துக்கொள்ள தலைவர், Tamil Nadu Multi Purpose Indco Serve, Trichy அவர்கள் விலைப்புள்ளி கொடுத்துள்ளார். எனவே, மேற்படி கூட்டுறவு சங்கத்திடமிருந்து இந்நகராட்சிக்கு தேவையான கீழ்க்கண்டுள்ள விபரப்படியுள்ள பதிவேடுகளை கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்குரிய செலவினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | **17** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ.எ. | தேவையான பதிவேடுகள் விபரம் | ஒன்றின் விலை | விலை விகிதம் | ஜி.எஸ்.டி. 18% | கூடுதல் | தேவை யான பதிவேடு கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு கமிட்டி தீர்மான பதிவேடு1 | 1 | 340 | 61.20 | 401.20 | 24 | 9629.80 |
| 2 | வார்டு கமிட்டி கூட்டங்களில் பெறப்படும் மனுக்கள் குறித்தபதிவேடு | 1 | 340 | 61.20 | 401.20 | 24 | 9629.80 |
| 3 | பகுதி சபா தீர்மான புத்தகம் | 1 | 340 | 61.20 | 401.20 | 24 | 9629.80 |
| 4 | பகுதி சபா கூட்டங்களில் பெறப்படும் மனுக்கள் குறித்தபதிவேடு | 1 | 340 | 61.20 | 401.20 | 24 | 9629.80 |
| | **மொத்தம்** | **4** | **1360** | **244.80** | **1604.80** | **96** | **38515.20** |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா நடத்துவதற்கு தேவையான பதிவேடுகள் கொள்முதல் செய்துக்கொள்ள ஆகும் செலவின தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2778/2022/சி1**

| | | | |
|---|---|---|---|
| **04** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வேதாரண்யம் சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் உள்ள மரபுக் கழிவுகளை Bio Mining முறையில் அகற்றுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை | **18** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்.9512/2022/SBM1, நாள்.20.06.2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு Saram Enviro Services Private Ltd நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், குப்பை கிடங்கில் உள்ள மரபுக் கழிவுகளை அளவீடு செய்யவும், அவ்வப்போது தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கிடவும், பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிடவும், இயக்குநர், சுற்றுசூழல் ஆய்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம், கிண்டி, சென்னை–600025 அவர்களுக்கு இந்நகராட்சியிலிருந்து 15.12.2022-ன்படி கடிதம் அனுப்பப்பட்டது. மேற்படி, கடிதத்திற்கு உரிய கட்டணம் செலுத்த தெரிவித்து கடிதம் எண்.1232/CES/SA/THIRUTHURAIPOONDI/PMC/2022-23நாள்.02.01.2023-ன்படி கட்டண தொகை ரூ.**4,72,000/-**செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதல் கட்டமாக 07.01.2023 அன்று செலுத்திய கட்டண தொகை ரூ.200000/-த்திற்கும் மீதம் செலுத்த வேண்டிய கட்டணத் தொகை ரூ.272000/-யும் பொதுநிதியில் The Director, Centre for Technology Development and Transfer (CTDT), Anna University, Chennai–600025 என்ற நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.545/2017-இ1** | | |

| | | | |
|---|---|---|---|
| **05** | தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் செப்டேஜ் மேலாண்மை ஒழுங்கு முறை விதிகள் வெளியிடப்பட்டு நகரிலுள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் மலக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து அப்புறப்படுத்துவதற்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண் 183 நாள் 31.12.2022 வாயிலாக வழிக்காட்டு நெறிமுறைகளை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><u>ந.க.எண்.3770/2018/இ1</u> | **19** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **06** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வார்டு எண்.2 ஜே.கே.ஆர் கார்டன் பூங்கா மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. இந்நிலையில் மேற்படி பூங்காவை சுற்றி கம்பிவேலி அமைத்திடவும், நுழைவாயில் அமைத்திடவும், பூங்கா உள்ள பகுதியில் மண்நிரப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சத்தை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.1783/2021-இ1</u>** | **20** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>07</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வார்டு எண்.2 ஜே.கே.ஆர் கார்டன் பூங்கா மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ளது. இந்நிலையில் மேற்படி பூங்காவை சுற்றி கம்பிவேலி அமைத்திடவும், நுழைவாயில் அமைத்திடவும், பூங்கா உள்ள பகுதியில் மண்நிரப்புதல் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் 23.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு</th><th>ஒப்பந்தப்புள் ளிதொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம் குறைவு/அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td rowspan="2">833743.75</td><td>833063.96</td><td>0.08% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருமதி.எஸ். மாரியம்மாள்</td><td>838256.50</td><td>0.54%அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08% குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
<u>ந.க.எண்.1783/2021-இ1</u>
</td>
<td>21</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **08** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022-2023ன்கீழ் நகராட்சி துறையில் நடைபெறும் சாலை பணிகளுக்கு செயல்படுத்த வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள், நிதி ஒதுக்கீடு, சாலைகள் தேர்வு செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் அனுமதி வழங்குதல் தொடர்பான நடவடிக்கையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் செயல்படுத்திட அனுமதி வழங்குவது தொடர்பான அரசாணை(எம்.எஸ்) எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.3) துறை நாள்.13.02.2023-ஐ மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br><br>ந.க.எண்.2840/2022,இ1 | **22** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **09** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன்கீழ் வார்டு எண்.23 நெடும்பலம் கேட்டடி தெரு (அண்ணா நகர் ஆதிதிராவிடர் தெரு) தார்சாலை அமைக்கும் பணி மற்றும் தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.10.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயலாணை ந.க.எண்.3874/2022/அ5 நாள்.20.01.2023ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 17.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **23** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</td><td>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ. பை.</td><td>ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. பை.</td><td>ஒப்பந்தப் புள்ளி சதவீதம் குறைவு/ அதிகம்</td></tr>
<tr><td>1.</td><td>எஸ்.பாலசுப்பிர மணியன்</td><td rowspan="2">899313.98</td><td>898676.55</td><td>0.07%குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>எஸ்.விஜயகுமாரி</td><td>900280.60</td><td>0.11%அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.07சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப் புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண்.3000/2022/இ1</u>
</td><td></td><td></td></tr>
<tr><td>10</td><td>திருத்துறைப்பூண்டி இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் எண்.TN-50 AX-6429 கொண்ட வாகனத்திற்கு நச்சுத் தொட்டியை சுத்தம் செய்யும் பணிக்கு போதிய நீளத்திற்கு ஹோஸ் இல்லாததால் குடியிருப்பின் பின்புறம் உள்ள நச்சுத் தொட்டி சுத்தம் செய்ய இயலவில்லை. எனவே100 MM ஹோஸ் 75 அடி மற்றும் அதற்குரிய உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 20.02.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.</td><td>24</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>100 MM ஹோஸ் 75 அடி விலை<br>ரூ.</th></tr>
<tr><td>1</td><td>SasthaEnviro Tech Equipment, Chennai</td><td>ரூ.68,440/-</td></tr>
<tr><td>2</td><td>METEK Engineering, Chennai</td><td>ரூ.74,871/-</td></tr>
<tr><td>3</td><td>Varsha Industries, Chennai</td><td>ரூ.70,800/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளிவழங்கியுள்ள Sastha Enviro Tech Equipment, Chennai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
<u>ந.க.எண்.419/2023,இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>11</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு வாகனம் எண்.TN50 B-9878 கொண்ட குடிநீர் டிராக்டர் வாகனத்தின் பேட்டரி பழுதடைந்து வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. அவசர அவசியம் கருதி புதிய பேட்டரி கொள்முதல் செய்வதற்கு 22.02.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும்</td>
<td>25</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படுகிறது.<br><br>**வ. எண்** \| **ஒப்பந்ததாரர் பெயர்** \| **பேட்டரியின் விலை ரூ.**<br>1 \| மதி டிராக்டர் ஒர்க்ஸ், திருத்துறைப்பூண்டி \| ரூ.6900/-<br>2 \| SM.RM.Tyres, South Street,திருவாரூர் \| ரூ.7000/-<br>3 \| ஸ்ரீ.ராகவேந்திரா அண்ட் கோ, திருத்துறைப்பூண்டி \| ரூ.7050/-<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட ரூ.6900 குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள மதி டிராக்டர் ஒர்க்ஸ், திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br><u>ந.க.எண்.499/2023/இ1</u> | | |

| | | | |
|---|---|---|---|
| **12** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிக்குரிய வாகனம் (TATA ACE) TN-50 AT-8929க்கு (FC பணி, தகுதிச்சான்று) ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து வழங்கிட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/-க்கு இதனை நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்குரிய வாகனம் பொதுசுகாதாரம் நலன்கருதி ஆகும் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம். மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண்.2365/2022-எச்1</u>** | **26** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **13** | இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணியினை தனியார் பங்களிப்புடன் (Out Sourcing)-க்கு தினசரி 45 பணியாளர்கள் கொண்டு தூய்மை பணியினை மேற்கொள்ளும் MSG-Infra, தஞ்சாவூர் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 31.01.2023ல் ஒப்பந்தம் முடிவடைந்ததால் தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஊதியத்தினை தூய்மை பணியாளர்களுக்கு வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் அனுமதியினை எதிர்நோக்கி பணியின் அவசர அவசியம் கருதி. அதே விலை விகிதத்தில் மேலும் 2 மாத காலம் வரை ஒப்பந்தக் காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரை நீட்டிப்பு செய்து பணிகளை மேற்கொள்ள MSG-Infra, தஞ்சாவூர் நிறுவனத்திற்கு | **27** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காண் நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாதம் காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை நீட்டித்து கொள்ளவும் அதற்கு ஆகும் செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண்.1716/2020-எச்1</u>** | | |
| **14** | இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மற்றும் டெங்கு தடுப்பு பணியினை தனியார் பங்களிப்புடன் (DBC) பணிக்கு 25 பணியாளர்கள் கொண்டு டெங்கு தடுப்பு The Karan Social Development Foundation, மன்னார்குடி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31.03.2023ல் ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது. புதியதாக DBC பணியாளர்கள் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணி முடிவடையும் வரையில் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, அதே விலை விகிதத்தில் மேலும் 2 மாதம் காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரை The Karan Social Development Foundation, மன்னார்குடி நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. | **28** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. மேற்காண் நிறுவனத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாதம் காலத்திற்கு ஆகும் செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>ந.க.எண்.1818/2020-எச்1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>15</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு உரக்கிடங்கு (Old Compost Yard) வேதாரண்யம் சாலையில் அமைந்துள்ளது. மேற்படி இடமானது திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஸ்ரீபவஔஷதீஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமானது. இதன் புல எண் 256/3. சதுர அடி 44928. இந்த இடத்திற்கு கீழ்க்கண்டுள்ள பசலி எண்களுக்கு பசலி தொகை செலுத்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பசலி எண்கள்</th><th>நிலுவை ரூ.</th><th>கேட்பு ரூ.</th><th>வசூல் ரூ.</th><th>பசலி எண் 1410 முதல் 143 வரை (30.06.2022)</th></tr>
<tr><td>1.</td><td>1410முதல் (31.10.2001) 1431 வரை</td><td>4033</td><td>-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>2</td><td>1410முதல் (31.10.2001)</td><td>-</td><td>480</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>3</td><td>1411 முதல் 01.11.2001 (முதல்) 30.06.2022 வரை</td><td>-</td><td>1800</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>4</td><td>1412</td><td>-</td><td>2700</td><td>-</td><td>-</td></tr>
</table></td>
<td>29</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | 1413 | - | 2700 | 1890 | - |
| 6 | 1414 | - | 3120 | - | - |
| 7 | 1415 | - | 3120 | - | - |
| 8 | 1416 | - | 3120 | - | - |
| 9 | 1417 | - | 360 | 14598 | - |
| 10 | 1418 | - | 3600 | - | - |
| 11 | 1419 | - | 3600 | - | - |
| 12 | 1420 | - | 4140 | - | - |
| 13 | 1421 | - | 4140 | - | - |
| 14 | 1422 | - | 4140 | - | - |
| 15 | 1423 | - | 4764 | - | - |
| 16 | 1424 | - | 4764 | - | - |
| 17 | 1425 | - | 4764 | - | - |
| 18 | 1426 | - | 5479 | - | - |
| 19 | 1427 | - | 5479 | - | - |
| 20 | 1428 | - | 5479 | - | - |
| 21 | 1429 | - | 6301 | - | - |
| 22 | 1430 | - | 6301 | - | - |
| 23 | 1431 | - | 6301 | - | - |
| **கூடுதல்** | | **4033** | **89892** | **16488** | **77437/-** |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிலுள்ள திருக்கோவிலுக்கு சொந்தமான புல எண் 256/3ல் 44928 சதுர அடி பரப்பளவில் உள்ள இடத்திற்கான, பசலி தொகை ரூ.81112/-ஐ நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr><td></td><td><u>ந.க.எண்.340/2023/எச்1</u></td><td></td><td></td></tr>
<tr><td>16</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் பணி மேற்கொள்ள சுகாதார பொருட்கள் கையிருப்பு இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்2 நாள்.10.11.2021ன் விலை விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுசுகாதாரம் பிரிவு தளவாட பொருட்கள் கீழ்க்கண்டவாறு தேவைப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருட்களின் பெயர்</th><th>தேவையான அளவு</th></tr>
<tr><td>1</td><td>மிலார்</td><td>200 எண்ணிக்கை</td></tr>
<tr><td>2</td><td>அன்னக்கூடை</td><td>200 எண்ணிக்கை</td></tr>
<tr><td>3</td><td>வார்கோல்</td><td>100 எண்ணிக்கை</td></tr>
<tr><td>4</td><td>பெரம்பு பிரஸ்</td><td>100 எண்ணிக்கை</td></tr>
<tr><td>5</td><td>குப்பை அள்ளும் கொக்கி பெரியது</td><td>50 எண்ணிக்கை</td></tr>
<tr><td>6</td><td>முள் கொக்கி</td><td>50 எண்ணிக்கை</td></tr>
<tr><td>7</td><td>மண்வெட்டி</td><td>20 எண்ணிக்கை</td></tr>
<tr><td>8</td><td>கடப்பாரை</td><td>5 எண்ணிக்கை</td></tr>
<tr><td>9</td><td>பாதுகாப்பு சீருடை</td><td>200 எண்ணிக்கை</td></tr>
<tr><td>10</td><td>கையுரை</td><td>200 எண்ணிக்கை</td></tr>
<tr><td>11</td><td>முககவசம்</td><td>500 எண்ணிக்கை</td></tr>
<tr><td>12</td><td>குப்பை அன்னத்தட்டு (இரும்பு)</td><td>100 எண்ணிக்கை</td></tr>
<tr><td>13</td><td>சுண்ணாம்பு வைக்கும் கூடை</td><td>6 எண்ணிக்கை</td></tr>
<tr><td>14</td><td>அலுமினிய வாளி</td><td>50 எண்ணிக்கை</td></tr>
<tr><td>15</td><td>கப்</td><td>50 எண்ணிக்கை</td></tr>
</table>
<br>மேற்படி பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.</td><td>30</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பிரிவு பணியின் நலன்கருதியும், நகர் பகுதியில் நோய் பரவா வண்ணம் பாதுகாத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் விலை விகிதத்தின்படி அரசு அனுமதி பெற்ற நிறுவனத்தில் கொள்முதல் செய்திட ஆகும் தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.450/2023-எச்1** | | |
| **17** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரம் பிரிவுக்கு, தினசரி பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமி பரவா வண்ணம் தடுக்கவும், அப்பகுதிகளை கண்டறிந்து சுத்தம் செய்வதற்கும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சீங் பவுடர் கொள்முதல் செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்2 நாள்.10.11.2021ல் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்தில், பொதுசுகாதாரம் பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி நீர்த்த சுண்ணாம்பு 10 டன் மற்றும் பிளிச்சீங் பவுடர் 4 டன் கொள்முதல் செய்திட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.4,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் விலை விகிதத்தின்படி அரசு அனுமதி பெற்ற | **31** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>நிறுவனத்தில் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண்.451/2023-எச்1</u></td><td></td><td></td></tr>
<tr><td>18</td><td>இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு, நகர் பகுதியினை திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் மேற்கொள்ள சுகாதாரப் பொருட்கள் கையிருப்பு இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்2 நாள்.10.11.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படி, பொது சுகாதாரம் பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணி பொருட்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்</th><th>டெங்கு தடுப்பு பணி பொருட்கள்</th><th>தேவையான அளவு</th></tr><tr><td>1</td><td>பைத்திரியம்</td><td>100 லிட்டர்</td></tr><tr><td>2</td><td>அபேட்</td><td>100 லிட்டர்</td></tr><tr><td>3</td><td>PT பவுடர்</td><td>50 கிலோ</td></tr><tr><td>4</td><td>MLO ஆயில்</td><td>100 லிட்டர்</td></tr><tr><td>5</td><td>சாக்கு</td><td>3000 எண்ணிக்கை</td></tr></table><br>மேற்படி கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு உத்தேச செலவினம் ரூ.3,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி அரசு நிர்ணயம் செய்துள்ள விலை விகிதப்படி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு தடுப்பு பணி பொருட்கள் கொள்முதல் செய்திட ஆகும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில்</td><td>32</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.452/2023-எச்1</u>** | | |
| **19** | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7220/2020/பி3 நாள்.09.07.2020ல் நகராட்சிகளால் பராமரிக்கப்படும் பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனங்களை நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், எந்த வாகனத்தின் இயக்கத்தினையும் நிறுத்தி வைக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதின் அடிப்படையிலும், இந்நகராட்சி பகுதிகளில் முதல்நிலை குப்பைகளை முழுமையாக சேகாரம் செய்ய முடியாத நிலை இருப்பதாலும், பொதுசுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு இந்நகராட்சியில் பயன்படுத்தப்படாமல் பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 10 எண்ணிக்கை பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்களில் (BOV's) தற்போது 3 வாகனங்கள் முழுமையாக சேதமடைந்த நிலையில் உள்ளதால், மீதமுள்ள 7 வாகனங்களை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**2.** பொது சுகாதார பிரிவு, திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் (BOV's) பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்களை நகராட்சியின் பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | **33** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **<u>ந.க.எண்.456/2023-எச்1</u>** | | |
| **20** | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 மேல வீதியில் திரு.ஃபாரூக் ராவுத்தர் என்பவருக்கு சொந்தமான ஆர்.சி.சி. முதல் தள கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலை உள்ளதை இடித்து அகற்றப்பட்டுள்ளதால், அதற்கான கீழ்க்காணும் விபரப்படியுள்ள வரி விதிப்பு எண்களையும் அதற்கான சொத்து வரி தொகையினையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது | **34** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ.எ. | வார்டு எண் | வரி விதிப்பு எண்கள் | | வரி விதிப்புதாரர் பெயர் திருவாளர் | நீக்கம் செய்யப்ப வேண்டிய | |
|---|---|---|---|---|---|---|
| | | புதிய எண் | பழைய எண் | | ஆண்டு | தொகை ரூ. |
| 1 | 9 | 103/009/900522 | 103/4002 | ஃபாரூக் ராவுத்தர் | 2022-23 | 772/- |
| 2 | 9 | 103/009/900523 | 103/4003 | ஃபாரூக் ராவுத்தர் | 2022-23 | 772/- |
| 3 | 9 | 103/009/900524 | 103/4004 | ஃபாரூக் ராவுத்தர் | 2022-23 | 772/- |
| 4 | 9 | 103/009/900525 | 103/4005 | ஃபாரூக் ராவுத்தர் | 2022-23 | 852/ |
| | | கூடுதல் | | | | 3168/- |

<table>
<tr>
<td></td>
<td>

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மேற்படி இடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளதின்படி ரூ.3168/- வரித் தொகையையும், நான்கு வரி விதிப்பு எண்களையும் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>ந.க.எண். 530/2023/அ1</u>

</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>21</td>
<td>

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 05 டி.மு.கோர்ட் சாலையிலுள்ள கதவு எண் 27இ. இவற்றின் வரி விதிப்பு எண் 103/3549 திரு.கணேசன் என்பவர் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்ட கடை முழுவதும் இடிக்கப்பட்டு தற்போது கோவில் நிர்வாகத்தினால் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளதால், மேற்படி வரி விதிப்பு எண்ணுக்குரிய தொகையினை வசூல் செய்வதற்கு மார்க்கம் இல்லாத காரணத்தினால், கீழ்க்காணும் விபரப்படியுள்ள வரி விதிப்பு எண்ணையும் அதற்கான தொகையினையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

<table>
<tr><th>வ.எ.</th><th>வார்டு எண்</th><th>வரி விதிப்பு எண்கள்</th><th>வரி விதிப்புதாரரர் பெயர் திருவாளர்</th><th>நீக்கம் செய்யப் பட வேண்டிய ஆண்டு</th><th>நீக்கம் செய் பட வேண்டிய வரி விதிப்பு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>5</td><td>103/3549</td><td>கணேசன்</td><td>2022-23</td><td>2120/-</td></tr>
</table>

</td>
<td>35</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br><br>2. சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மேற்படி இடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையில், ஒரு வரி விதிப்பு எண்ணையும் அதற்கான வரித் தொகையினையும், நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண்.531/2023/அ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>22</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 05 டி.மு.கோர்ட் தெருவில் திரு.சுல்தான் ஆரின் சாய்பு என்பவரின் பெயரில் இருந்த ஆர்.சி.சி. முதல் தளம், மூன்று கட்டிடங்கள் பழுதடைந்த காரணத்தினால் இடித்து அகற்றப்பட்டுவிட்டதால், மேற்படி கட்டிடத்திற்கு கீழ்க்காணும் விபரப்படியுள்ள வரி விதிப்பு எண்களையும், அதற்கான வரி விதிப்பு தொகையினையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது
<table>
<tr><td rowspan="2">வ.எ.</td><td rowspan="2">வார்டு எண்</td><td rowspan="2">வரி விதிப்பு எண்கள்</td><td rowspan="2">வரி விதிப்புதாரர் பெயர்</td><td colspan="2">நீக்கம் செய்யப் பட வேண்டிய</td></tr>
<tr><td>ஆண்டு</td><td>வரி விதிப்பு தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>5</td><td>103/3601</td><td>திரு.சுல்தான் ஆரின் சாய்பு</td><td>2022-23</td><td>1372/-</td></tr>
<tr><td>2</td><td>5</td><td>103/3602</td><td>திரு.சுல்தான் ஆரின் சாய்பு</td><td>2022-23</td><td>1220/-</td></tr>
</table>
</td>
<td>36</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>5</td><td>103/3603</td><td>திரு.சுல்தான் ஆரின் சாய்பு</td><td>2022-23</td><td>1220/-</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td></td><td></td><td>3812/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மேற்படி இடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையில் மூன்று வரி விதிப்பு எண்களையும் அதற்கான வரித் தொகையினையும், நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண்.432/2023/அ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>23</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19 ஜவுளிக்கடைத் தெருவில் திருமதி.தரணி என்பவர் பெயரில் கூரை வீட்டுக்கான சொத்து வரி விதிப்பு உள்ளது. மேற்படி சொத்து வரி விதிப்பிற்கான கூரை வீடு நெடுஞ்சாலைத் துறை, சாலையோர ஆக்கிரமிப்புகள் அகற்றும்போது, மேற்படி வீடு அகற்றப்பட்டுவிட்டது. கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்படி இடத்தில் வீடு இல்லை. எனவே கீழ்க்காணும் விபரப்படியுள்ள வரி விதிப்பு எண்களையும் அதற்கான நிலுவை தொகையினையும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>37</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">வ.எ.</td><td rowspan="2">வார்டு எண்</td><td rowspan="2">வரி விதிப்பு எண்கள்</td><td rowspan="2">வரி விதிப்புதாரர் பெயர்</td><td colspan="2">நீக்கம் செய்யப் பட வேண்டிய</td></tr>
<tr><td>ஆண்டு</td><td>வரி விதிப்பு தொகை ரூ.</td></tr>
<tr><td>1</td><td>19</td><td>103/019/ 900557 ப.எ.103/8711</td><td>திருமதி.தரணி</td><td>2020-21 முதல் 2022-23 வரை</td><td>547/-</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் மேற்படி இடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையில் மேற்படி வரி விதிப்பு எண்ணையும் அதற்கான நிலுவை வரித் தொகையினையும், நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண்.533/2023/அ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>24</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 முத்துப்பேட்டை ரோடு UPTO BHS தெருவில் திருமதி.பத்மாவதி என்ற பெயரில் இந்நகராட்சி வரி விதிப்பு எண் 103/017/900130, கதவு எண் 48/1-ல் குடியிருப்பு பயன்பாடு கொண்ட கட்டிடம் உள்ளது. இதன் முகப்பு பகுதி (குடியிருப்பு கட்டிடத்தின் வெளிப்பகுதி) 72 சதுர அடி அளவில் வணிகம் நடத்தப்பட்ட நிலையில் அதற்கு வரி விதிப்பு எண் 103/017/900129, கதவு எண் 48-க்கு அரையாண்டு வரி ரூ.322/- என நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்ட நிலையில்,</td>
<td>38</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி வணிக பயன்பாட்டு கட்டிடம் அகற்றப்பட்டு, தற்போது குடியிருப்பு பயன்பாட்டு கட்டிடம்` மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருவதால், அகற்றப்பட்ட வணிகப்பயன்பாட்டு கட்டிடத்திற்கான (2019-20 முதல் 2022-23 வரை உள்ள காலத்திற்கான) நிலுவைத் தொகை ரூ.5640/-யை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**2.** சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் மேற்படி இடத்தினை நேரடியாக கள ஆய்வு செய்து, அறிக்கை சமர்ப்பித்துள்ளதின் அடிப்படையில் மேற்படி வரி விதிப்பு எண்ணையும் அதற்கான நிலுவை வரித் தொகையினையும், நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.534/2023/அ1 | | |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/